OS 135/2021

பி.வா.சா.1 மணிகண்ட பிரபு த/பெ ராஜா

நாள் 13.03.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது பணி என்ன என்றால் ஆரணி இந்து சமய அறநிலையத்துறையில் ஆய்வாளர் ஆவேன். ஆரணியில் எப்போது நான் பணியில் சேர்ந்தேன் என்றால் 14.12.2023ல் சேர்ந்தேன். தாவா கோயில் உள்ள இடம் குன்னத்தூர் கிராமம் ஆகும். அந்த கோயிலை பார்வையிட நான் எத்தனை முறை சென்று இருக்கிறேன் என்றால் 10 முறை சென்று இருக்கிறேன். 10 முறை சென்ற தேதி விவரம் மற்றும் எதற்காக சென்றேன் என்று சொல்ல முடியுமா என்றால் தேதி சொல்லமுடியாது கோயில் திருப்பணிக்காக சென்றேன். திருப்பணிக்கான உத்தரவு தேதி சொல்லமுடியுமா என்றால் உத்தரவு செய்யப்பட்டுள்ளது தேதி குறித்து அந்த உத்தரவு ஆணைகளை பார்த்தால் தான் சொல்ல முடியும். திருப்பணி உத்தரவு சம்மந்தமான ஆவணங்களை தான் கொண்டு வந்து இருக்கேன். கோயில் எந்த வருடம் கட்டினார்கள் என்ற ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. கோயில் புனரமைப்பு செய்ய எவ்வளவு தொகை அனுமதிக்கப்பட்டது என்றால் ரூ.19,50,000/- ஆகும். 12.11.2024ல் திருப்பணி செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவை யார் வழங்கியது என்றால் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை அவர்களால் வழங்கப்பட்டது.

2. மேற்படி திருப்பணி செய்ய டெண்டர் விடப்பட்டுள்ளதா என்றால் விடப்பட்டுள்ளது. கோயில் யார் கட்டினார்கள் யார் நிர்வாகம் செய்கிறார்கள் என்று நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. தாவா கோயில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பட்டது என்பதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் ஆவணம் இருக்கிறது. எந்த வருடம் தாவா கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த கோயிலில் யார் பூஜை செய்தது என்றால் முழு கால பூஜையை விஜயகுமார் செய்து வந்தார் அவர் இறந்த பிறகு அவரது மனைவி ராதா என்பவர் செய்து வருகிறார். விஜயகுமார் எத்தனை வருடங்கள் பூஜை செய்தார் என்றால் தெரியாது. தாவா கோயிலுக்கு யார்அறங்காவலராக நியமனம் செய்யப்பட்டார் என்றால் 2005ம் ஆண்டு பிச்சாண்டி என்பவர் அறங்காவலராக நியமனம் செய்யப்பட்டார். அவர் எந்த வகுப்பை சேர்ந்தவர் என்றால் குயவர் வகுப்பை சேர்ந்தவர். பிச்சாண்டி எத்தனை வருடங்களாக அறங்காவலராக இருந்தார் என்றால் 3 வருடங்கள் இருந்தார்.

3. அதன்பிறகு 2011 முதல் 2021 வரை டிரஸ்ட் போர்ட் அரசால் அமைக்கப்படவில்லை அதனால் பிச்சாண்டிக்கு பிறகு அறங்காவலர் நியமனம் செய்யவில்லை. 2021ல் டிரஸ்ட் போர்ட் அமைத்தார்கள் இந்த வழக்கு இருப்பதால் அறங்காவலர் நியமனம் செய்யவில்லை. எனது எதிர்வழக்குரையில் மேலே சொன்ன விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். 2011 முதல் விஜயகுமார் ஒரு கால பூஜையை தொடர்ந்து செய்து வந்தார். தாவா கோயிலில் எத்தனை சன்னதி இருக்கிறது என்றால் கருவறை, அர்த்த மண்டபம், நவ கிரகம் ஆகியவை உள்ளது. அவற்றுக்கு ஒரு கால பூஜை நடக்கிறது. பூஜை பொருட்களுக்காக 3 மாதம் ஒரு முறை ரூ.4 ஆயிரமும் பூஜை செய்பவருக்கு மாதம் ஆயிரமும் வழங்கப்படுகிறது. மேலே சொன்ன தொகை இல்லாமல் குயவர் வகுப்பை சார்ந்தவர்கள் செலவு செய்து பூஜை செய்கிறார்கள் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

4. தாவா கோயிலுக்கு உண்டியல் இருக்கிறதா என்றால் இல்லை. தாவா கோயிலுக்கு தனிப்பட்ட வருமானம் இருக்கிறதா என்றால் நிலம் இருக்கிறது. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் நிலம் ஏலம் இடப்படாமல் இருக்கிறது. குயவர் வகுப்பை சேர்ந்தவரை தவிர வேறு வகுப்பை சேர்ந்தவர் நிர்வாகம் செய்ய மனு அளித்திருக்கிறாரா என்றால் இல்லை. தாவா கோயில் குயவர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு சொந்தமானதா என்றால் இல்லை. கோயில் யாருக்கு சொந்தமானது என்றால் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமானது. வாதி பழனியை நான் பார்த்து இருக்கிறேனா என்றால் பார்த்ததில்லை. தாவா கோயிலை வாதி தான் நிர்வாகம் செய்கிறாரா என்றால் இல்லை. வாதி அறங்காவலர் ஆக தன்னை நியமனம் செய்ய வேண்டும் என்று மனு செய்திருந்தார் என்றால் அவ்வாறு மனு செய்யவில்லை நிர்வாகம் செய்ய மனு செய்திருந்தார் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். குயவர் வகுப்பை சார்ந்தவர்கள் தாவா கோயிலை நிர்வாகம் செய்ய உரிமை இருக்கிறது என்றால் நாங்கள் அதை ஆட்சேபனை செய்ய முடியாது என்றாலும் சரியல்ல.

5. கோயில் புனரமைப்பு செய்வதற்காக கட்டிடங்கள் இடிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஏன் திருப்பணி ஆரம்பிக்கவில்லை என்றாலும் ஏற்கனவே கோயில் பாழ் அடைந்து இருப்பதால் ஊர் மக்கள் சார்பாக புதியாக கோயில் கட்டும் படி கூறியதால் புதியதாக கோயில் கட்டுவதற்கான கமிட்டிக்கு எஸ்டிமேட் அனுப்பி இருக்கிறோம். கோயில் நாங்களே கட்டுகிறோம் என்று குயவர் சமூகம் மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால் மனு கொடுக்கவில்லை. வாதி தரப்பு 20.08.2025ல் ஒரு கடிதம் அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா கோயில் சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோயில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சம்மந்தமானது அல்ல என்றால் சரியல்ல. ஒருகால பூஜை எதற்காக நடத்தப்படுகிறது என்றால் நிதி வசதி இல்லாத அனைத்து கோயிலுக்கும் ஒரு கால பூஜை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஒரு கால பூஜை நடத்துவதற்கான ஊர் மக்கள் ரூ.2,500/- வைப்பீடு செய்ய வேண்டும் என்றாலும் அந்த விவரமும் தெரியுமா என்றாலும் அரசாங்கம் ரூ.10 ஆயிரம் கொடுக்கும் ஊர் மக்கள் ரூ.2,500 கொடுப்பார்கள்.

6. அவ்வாறு ரூ.2,500 செலுத்தியதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. நலிவடைந்த கோயிலுக்கு பணம் மட்டும் வழங்கப்பட்டது கோயில் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதி சமூகத்தை சார்ந்தவர்கள் தாவா கோயிலில் அறங்காவலராக நியமனம் செய்ய தாக்கல் செய்துள்ள வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.